සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

# කර්ණාටක සංගීතය I / கர்நாடக சங்கீதம் I / Carnatic Music I

55 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**கவனிக்க :**

- ❊ ***எல்லா*** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❊ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது ***சுட்டெண்ணை எழுதுக.***
- ❊ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
- ❊ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் ***சரியான*** அல்லது ***மிகப் பொருத்தமான*** விடையைத் தெரிந்தெடுத்து, ***அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய*** விடைத்தாளில் ***புள்ளடி*** (X) இடுவதன் மூலம் காட்டுக.

1. ஹம்சத்வனி இராகத்தில் அமைந்த வர்ணம்
   (1) முருகா உன்மேல் (2) ஜலஜாக்ஷி (3) நின்னுகோரி (4) எவ்வரிபோ (5) வனஜாக்ஷி

2. பழம்பஞ்சுரப் பண்ணில் அமைந்த தேவாரம்
   (1) சலம்பூவொடுதூபம் (2) மாதர்மடப்பிடியும்
   (3) உற்றுமை சேர்வது (4) அந்தநாளனுன்
   (5) எந்தையீசன்

3. ஸரிகமதநிஸ் – ஸ்நிதமகரிஸ என்னும் ஆரோகண அவரோகணத்தையுடைய இராகம்
   (1) ஸ்ரீஇராகம் (2) மோகனம்
   (3) நவரசகன்னட (4) கமாஸ்
   (5) ஸ்ரீரஞ்சனி

4. 20ஆவது மேளகர்த்தாவில் ஜன்யமான இராகங்கள்
   (1) வசந்தா, ஸாவேரி (2) ஆனந்தபைரவி, பைரவி
   (3) ஸாவேரி, பைரவி (4) ஹிந்துஸ்தான்காபி, ஆனந்தபைரவி
   (5) ஆபோகி, சுத்தஸாவேரி

5. ஹிந்துஸ்தான்காபி இராகம்
   (1) ஆரோகணத்தில் அன்னியஸ்வரத்தையுடைய இராகம்
   (2) ஏக அன்னியஸ்வர இராகம்
   (3) த்ரி அன்னியஸ்வர இராகம்
   (4) த்வி அன்னியஸ்வர இராகம்
   (5) ஆரோகணத்தில் ஓர் அன்னியஸ்வரத்தையும் அவரோகணத்தில் ஓர் அன்னியஸ்வரத்தையும் உடைய இராகம்

6. A - 1813ஆம் ஆண்டு திருவாங்கூர் அரச குடும்பத்தில் பிறந்தார்.
   B - இளமையில் பல மொழிகளைக் கற்றார்.
   C - "சலமேல" என்ற சங்கராபரண இராகத்திலமைந்த அடதாள வர்ணத்தை இயற்றியவர்.
   D - அரசனாகவும் வாக்கேயகாரராகவும் விளங்கியதோடு சங்கீத வித்வான்களையும் நாட்டியமணிகளையும் ஆதரித்தவர்.
   E - உற்சவ பிரபந்தம் எனும் நூலை இயற்றியவர்.

   மேல்வரும் கூற்றுகளுக்குப் பொருத்தமான வாக்கேயகாரர்
   (1) முத்துஸ்வாமி தீக்ஷிதர் (2) ஸ்வாதித்திருநாள் மஹாராஜா
   (3) சியாமா சாஸ்திரிகள் (4) பாபநாசம் சிவன்
   (5) மைசூர் வாஸுதேவாசாரியார்

7. முத்துஸ்வாமி தீக்ஷிதர் முதன்முதலாக இயற்றிய கிருதி
   (1) வாதாபி கணபதிம் (2) ஆனந்தநடனபிரகாசம்
   (3) ஸ்ரீநாதாதிகுருகுஹோ (4) ஆனந்தாமிருதகர்ஷிணி
   (5) ஸ்ரீவரலக்ஷ்மி

[பக். 2 ஐப் பார்க்க

8. நவராகமாலிகா வர்ணத்தின் முத்தாயிஸ்வரம் அமைந்துள்ள இராகங்கள்
   (1) கேதாரம், சங்கராபரணம்
   (2) கல்யாணி, பேகடை
   (3) காம்போதி, பிலஹரி
   (4) மோகனம், ஸ்ரீராகம்
   (5) யதுகுலகாம்போதி, காம்போதி

9. "சரணகமலாலயத்தை" என்னும் பாடல்
   (1) தேவாரம் (2) கீர்த்தனை (3) திருவாசகம் (4) திருப்புகழ் (5) கந்தரலங்காரம்

10. A - 15ஆவது மேளமாகிய மாயாமாளவ கௌளையின் ஜன்னியம்.
    B - ஔடவ சம்பூர்ண இராகம்.
    C - ஆரோகணத்தில் க, நி வர்ஜம்.
    D - பல்லவி சேஷய்யர் இந்த இராகத்தை எட்டு மணி நேரம் பாடியதாகச் சொல்லப்படுகிறது.
    E - கருணைச் சுவையை வெளிப்படுத்தும் இராகம்

    மேலே தரப்பட்ட கூற்றுகளுக்குப் பொருத்தமான இராகத்தின் ஆரோகண அவரோகணம்
    (1) ஸரிகபதஸ் - ஸ்நிதபமகரிஸ
    (2) ஸரிமபதஸ் - ஸ்நிதபமகரிஸ
    (3) ஸகபதநிஸ் - ஸ்நிதபமகரிஸ
    (4) ஸமபதநிஸ் - ஸ்நிதபமகரிஸ
    (5) ஸரிமபநிஸ் - ஸ்நிதபமகரிஸ

11. 72 மேளகர்த்தா அட்டவணையில் 10ஆவது சக்கரத்தில் 2ஆவது இராகம்
    (1) சியாமளாங்கி
    (2) நடபைரவி
    (3) ஷண்முகப்பிரியா
    (4) ஹேமவதி
    (5) ஸிம்ஹேந்த்ரமத்யமம்

12. ஸ்ரீ ஸாரஸபதே
    ரஸ பதே
    ஸப தே
    பதே
    என்ற அமைப்பில் அமைந்துள்ள யதி
    (1) ஸ்ரோதோவஹயதி
    (2) கோபுச்சயதி
    (3) மிருதங்கயதி
    (4) டமருயதி
    (5) விசமயதி

13. தக்கேசிப் பண்ணில் அமைந்த தேவாரம்
    (1) ஆலந்தானுகந்து
    (2) சலம்பூவொடு தூபம்
    (3) மாதர்மடப்பிடியும்
    (4) உற்றுமை சேர்வது
    (5) பூர்த்தேன்தாயன

14. கிருதியின் ஸாகித்தியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் கலந்து வருமாயின் அவ்வணி
    (1) ஸங்கதி
    (2) யமகம்
    (3) மணிப்பிரவாளம்
    (4) மத்திமகால ஸாகித்தியம்
    (5) மகுட ஸாகித்தியம்

15. ஓர் இராகத்தைப் பல பாகங்களாகப் பிரித்து ஆலாபனை செய்யும்போது அந்தப் பகுதிகளில் முடிக்கப்படும் ஸ்வரம்
    (1) சன்னியாசம்
    (2) வின்னியாசம்
    (3) அபன்னியாசம்
    (4) நியாஸம்
    (5) அல்பத்துவம்

16. பஹுத்வனி வாத்தியம் என்பதன் விளக்கம்
    (1) ஒரு தருணத்தில் ஒரு ஸ்வரம் மாத்திரமே வாசிக்கக்கூடிய வாத்தியம்
    (2) ஒரு தருணத்தில் இரண்டு, மூன்று ஸ்வரங்களை வாசிக்கக்கூடிய வாத்தியம்
    (3) உருப்படிகள், ஆலாபனை வாசிப்பதற்கேற்ற வாத்தியம்
    (4) சுருதியும் கூட ஒலிப்பதற்கு வசதியுள்ள வாத்தியம்
    (5) தாளத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாத்தியம்

17. வீணையின் யாழி முகம் செய்யப்படும் மரம்
    (1) பலா (2) நுணா (3) ஆச்சா (4) தேக்கு (5) முதிரை

e-தக்சலாவ The National e-learning Portal - The General Education

[பக். 3 ஐப் பார்க்க

18. A - தம் உருப்படிகளில் தம் பெயரையே முத்திரையாகக் கையாண்டார்.
B - 1920இல் சகானா இராகத்தை 1 1/2 மணி நேரம் பாடினார்.
C - சங்கீதகலாகோவிந்த், ஸரஸகான சிரோன்மணி, சங்கீத ஸாகித்திய வித்வமணி என்றும் கௌரவிக்கப்பட்டார்.
D - 1959இல் 'பத்மபூஷண்' விருது அளிக்கப்பட்டது.

மேல்வரும் கூற்றுகளுக்குப் பொருத்தமான வாக்கேயகாரர்

(1) சியாமா சாஸ்திரிகள்
(2) பைடாலகுருமூர்த்தி சாஸ்திரிகள்
(3) வாஸுதேவாசாரியார்
(4) மாரிமுத்தாப்பிள்ளை
(5) புரந்தரதாஸர்

19. தேவாலயங்களில் வாசிக்கப்படும் வாத்தியம்

(1) பஞ்சமுகவாத்தியம்
(2) தமுக்கு
(3) முரசு
(4) தோதார்
(5) துந்தினா

20. 'தில்லானா சக்கரவர்த்தி' என நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனால் கௌரவிக்கப்பட்டவர்

(1) வீணை பாலசந்தர்
(2) மகாராஜபுரம் விஸ்வநாதஜயர்
(3) லால்குடி ஜெயராமன்
(4) M.S. சுப்புலட்சுமி
(5) M.L. வசந்தகுமாரி

21. 'கவிகாளமேகம்' என்னும் திரைப்படத்தில் நடித்த கலைஞர்

(1) A.K.C. நடராஜன்
(2) M.P. பாலகிருஷ்ணன்
(3) ஷேக் சின்ன மௌலானா
(4) N.K. பத்மநாதன்
(5) திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளை

22. ஹிந்துஸ்தானி சங்கீதம் ஆங்கிலேயரின் ஆட்சிக்குப்பின் அழிந்து போகாமல் காத்த பெருமைக்குரியவர்

(1) பாத்கண்டே
(2) அமிர்குஸ்ரு
(3) தான்சேன்
(4) ரவிசங்கர்
(5) அல்லாரக்கா

23. புல்லாங்குழல் வாசிப்பதில் பிரபல்யமான வித்துவான்கள்

(1) நீடாமங்கலம் மீனாட்க்ஷிசுந்தரம்பிள்ளை, அம்மாப்பேட்டை பக்கிரி, கண்ணுசாமிப்பிள்ளை
(2) காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளை, திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளை, குஞ்சிதபாதம்பிள்ளை
(3) M.S. கோபாலகிருஷ்ணன், புத்துவாட்டிசோமு, மைசூர் சௌடய்யா
(4) D.N. சுவாமிநாதபிள்ளை, T.R. நவநீதம், T.R. மகாலிங்கம்
(5) நாராயணிசாமி அப்பா, பாலக்காடு மணி ஐயர், காரைக்குடி மணிஐயர்

24. 72 மேளகர்த்தா சக்கரத்தில் விவாதி மேளங்களை மாத்திரம் எடுத்துக்கொள்ளும் சக்கரங்கள்

(1) இந்து, அக்கினி, வேத, பாண
(2) நேத்ர, திசி, ருத்ர, வேத
(3) இந்து, ருது, ரிஷி, ஆதித்ய
(4) வஸு, ப்ரஹ்ம, ருத்ர, ஆதித்ய
(5) வேத, பாண, திசி, ருத்ர

25. தாலாட்டுப் பாடல்களும் ஊஞ்சற் பாடல்களும் பாடுவதற்கு மிகப் பொருத்தமான இராகம்

(1) ரீதிகௌளை (2) சாரங்கா (3) கமாஸ் (4) வசந்தா (5) ஆனந்தபைரவி

26. மனோதர்ம சங்கீதப் பிரிவுகளுள் தாளத்துடன் பாடப்படாத பிரிவு

(1) நிரவல், தானம்
(2) இராகம், கற்பனாஸ்வரம்
(3) பல்லவி, நிரவல்
(4) இராகம், தானம்
(5) தானம், பல்லவி

27. ஜயதேவர் இயற்றிய அஷ்டபதிகளில் குறிப்பிடப்படும் நாயகன்

(1) சிவன் (2) முருகன் (3) கிருஷ்ணன் (4) பிரம்மா (5) தேவர்

28. 23 பண்களிலும் தேவாரங்கள் அருளி சிறப்புப் பெறுபவர்

(1) சுந்தரமூர்த்தி நாயனார்
(2) திருநாவுக்கரசு நாயனார்
(3) மாணிக்கவாசகர்
(4) காரைக்காலம்மையார்
(5) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

[பக். 4 ஐப் பார்க்க

2873

29. 35 தாளங்களிலே பன்னிரண்டினை மொத்த அட்சரங்களாகக் கொண்ட தாளங்கள்
    (1) கண்டஜாதி அடதாளம், மிஸ்ரஜாதி ரூபகதாளம், சங்கீர்ணஜாதி ஜம்பைதாளம்
    (2) கண்டஜாதி மட்டியதாளம், சங்கீர்ணஜாதி ஜம்பைதாளம், சதுஸ்ரஜாதி அடதாளம்
    (3) சதுஸ்ரஜாதி திரிபுடைதாளம், மிஸ்ரஜாதி துருவதாளம், சதுஸ்ரஜாதி அடதாளம்
    (4) கண்டஜாதி துருவதாளம், சதுஸ்ரஜாதி மட்டியதாளம், மிஸ்ரஜாதி ஜம்பைதாளம்
    (5) மிஸ்ரஜாதி திரிபுடைதாளம், சதுஸ்ரஜாதி அடதாளம், கண்டஜாதி மட்டியதாளம்

30. பெருவங்கியம் என்னும் மறுபெயரையுடைய வாத்தியம்
    (1) நாதஸ்வரம் (2) புல்லாங்குழல் (3) தம்புரா (4) சங்கு (5) மிருதங்கம்

31. கனபஞ்சக இராகங்கள் எனப்படுபவை
    (1) பிலஹரி, ஆரபி, காம்போதி, வராளி, நாட்டை
    (2) நாட்டை, ஆரபி, மோகனம், வராளி, கௌளை
    (3) நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீராகம்
    (4) நாட்டை, கௌளை, பிலஹரி, ஸ்ரீராகம், வராளி
    (5) ஆரபி, மோகனம், நாட்டை, காம்போதி, கௌளை

32. ஹிந்துஸ்தானி சங்கீதத்தை முதன்முதலாக மேலைத்தேய லிபி முறையில் எழுதியவர்
    (1) பாத்கண்டே (2) அமிர் குஸ்ரு
    (3) தான்சேன் (4) சேர் சுரேந்திர மோஹன டாகூர்
    (5) பாலுஸ்வாமி தீக்ஷிதர்

33. ஹிந்துஸ்தான் பெஹாக் இராகத்தில் வரும் அன்னிய ஸ்வரங்கள்
    (1) பிரதி மத்திமம், கைசிகி நிஷாதம் (2) சுத்த மத்திமம், கைசிகி நிஷாதம்
    (3) சுத்த மத்திமம், காகலி நிஷாதம் (4) பிரதி மத்திமம், சதுஸ்ருதி தைவதம்
    (5) பிரதி மத்திமம், சுத்த தைவதம்

34. சாரங்கதேவர், வேங்கடமகி, ஜெயதேவர் ஆகியோர் இயற்றிய நூல்கள் முறையே
    (1) கீதகோவிந்தம், சதுர்த்தண்டிப் பிரகாசிகை, சங்கீத மகரந்தம்
    (2) சதுர்த்தண்டிப் பிரகாசிகை, சங்கீத ரத்னாகரம், கீதகோவிந்தம்
    (3) சங்கீத மகரந்தம், சதுர்த்தண்டிப் பிரகாசிகை, கீதகோவிந்தம்
    (4) சங்கீத ரத்னாகரம், சதுர்த்தண்டிப் பிரகாசிகை, கீதகோவிந்தம்
    (5) சங்கீத ரத்னாகரம், சங்கீத மகரந்தம், கீதகோவிந்தம்

35. A - காந்தாரம்
    B - தக்கராகம்
    C - கொல்லி
    D - குறிஞ்சி
    E - பியந்தைக் காந்தாரம்
    மேலே தரப்பட்ட பண்களில் நவரோஜ் இராகத்திற்கு ஒப்பானவை
    (1) B, A, D (2) A, C, D (3) A, D, E (4) C, D, E (5) A, C, E

36. மேலைத்தேய லிபி முறையில் மோகன இராகத்திற்குரிய ஸ்வரஸ்தானங்கள் முறையே
    (1) C, D flat, E, G, A flat (2) C, D, E, G, A flat
    (3) C, D, E, G, A (4) C, D flat, E, G, A flat
    (5) C, D, E flat, G, A

37. ஸரோட் வாத்தியத்தை வங்காளத்தில் அறிமுகப்படுத்தியவர்
    (1) அலிஅக்பர்கான் (2) ஸஹாப் அப்துல்லாகான்
    (3) புத்ததேவ் தாஸ்குப்தா (4) அம்ஜத் அலிகான்
    (5) அல்லாவுதீன்கான்

38. இரு விலாப்பலகைகளுக்கும் உட்புறமாக நாதக்குச்சியை உடைய தந்தி வாத்தியம்
    (1) வீணை (2) கோட்டுவாத்தியம்
    (3) தம்புரா (4) சித்தார்
    (5) வயலின்

39. சம்பூர்ண ஆரோகண அவரோகணத்தையுடைய பாஷாங்க இராகம்
    (1) காம்போஜி (2) ஹமீர்கல்யாணி
    (3) பைரவி (4) ஹிந்துஸ்தான்காபி
    (5) பிலஹரி

40. ஒலியின் உரப்பு குறிக்கப்படும் அலகு
(1) டெசிபல் (2) அம்பியர் (3) ஹேட்ஸ் (4) வோல்ட்ஸ் (5) மீற்றர்

41. கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை என்ற இரு பிரிவுகள் பற்றி முதன்முறையாகக் குறிப்பிடப்படும் நூல்
(1) சங்கீத பாரிஜாதம் (2) சங்கீத சுதாகர
(3) சங்கீத மகரந்தம் (4) சங்கீத ரத்னாகரம்
(5) ஸ்வரமேள கலாநிதி

42. ஷட்மார்க்கங்களுள் ஒரு தாள அட்சரத்திற்கு 4 மாத்திரைகளையும் 16 ஸ்வரங்களையும் எடுத்துக்கொள்ளும் மார்க்கம்
(1) சித்ரதர மார்க்கம் (2) தட்சிண மார்க்கம்
(3) சித்ர மார்க்கம் (4) வார்த்திக மார்க்கம்
(5) அர்த்த சித்ர மார்க்கம்

43. "என்ன பிழைப்புன்றன் பிழைப்பையா" என்னும் வேளாவளி இராகத்திலமைந்த நிந்தாஸ்துதிப் பாடலை இயற்றிய வாக்கேயகாரர்
(1) முத்துத்தாண்டவர் (2) மாரிமுத்தாப்பிள்ளை
(3) கோபாலகிருஷ்ண பாரதியார் (4) அருணாசலக் கவிராயர்
(5) பாபநாசம் சிவன்

44. ஸிதார் வாசிப்பு முறையில் இரண்டு விதமான வாசிப்பு முறைகள் ஸிதார் வாசிப்பதில் பிரபல்யம் பெற்றவர்களின் பெயர்களிலேயே அழைக்கப்படுகின்றன. அவர்களின் பெயர்கள் முறையே
(1) ராஸாகான், ரஹீம்சென் (2) ராஸாகான், மஸ்ஸித்கான்
(3) நிஹல்சென், பண்டிட் ரவிசங்கர் (4) விலயட்கான், மஸ்ஸித்கான்
(5) ரஹீம்சென், பண்டிட் ரவிசங்கர்

45. திருகோணமலையில் தட்சணா கானசபாவினை நிறுவி இசைப்பணியாற்றியவர்
(1) பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் (2) தவில் தட்சணாமூர்த்தி
(3) N.K. பத்மநாதன் (4) செல்வி. இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
(5) N.S. உருத்திராபதி

46. A - தாதுவின் அமைப்பில் கீதத்தை ஒத்திருக்கும்.
B - தமிழ்மொழியில் மாத்திரம் அமைந்துள்ளது.
C - ஸுட என்ற கன்னட சொல்லிலிருந்து தோன்றிய உருப்படி வகை
D - தமிழில் பஞ்சதாளங்களில் இயற்றப்பட்டுள்ளது.
E - விளம்ப காலத்தில் மட்டுமே பாடப்படுகின்றது.
பின்வருவனவற்றில் சூளாதியில் இலட்சணங்களாக அமைந்திருப்பது
(1) A, B, D (2) B, C, D (3) A, C, D (4) B, D, E (5) A, C, E

47. மனிதனுடைய காது கேட்கும் திறனைப் பெற்றிருக்கும் ஒலியின் துடிப்பு (Hertz) எல்லை
(1) 16 Hz இலிருந்து 15 000 Hz வரை (2) 20 Hz இலிருந்து 10 000 Hz வரை
(3) 80 Hz இலிருந்து 25 000 Hz வரை (4) 10 Hz இலிருந்து 15 000 Hz வரை
(5) 16 Hz இலிருந்து 20 000 Hz வரை

48. ஸரிகிமபதநு என்னும் சங்கேதாட்சரங்களால் குறிக்கப்படும் மேளராகம்
(1) கரஹரப்பிரியா (2) ஹரிகாம்போஜி
(3) கீரவாணி (4) ஷண்முகப்பிரியா
(5) நடபைரவி

49. "மரிவேறேகதி" என்னும் ஆனந்தபைரவி இராக கிருதியை இயற்றிய வாக்கேயகாரர்
(1) முத்துஸ்வாமி தீக்ஷிதர் (2) தியாகராஜ சுவாமிகள்
(3) சியாமா சாஸ்திரிகள் (4) புரந்தரதாஸர்
(5) கனம் கிருஷ்ணய்யர்

50. யாழ்முரிப்பண்ணில் அமைந்த தேவாரம் பாடப்பட்ட தலம்
(1) தருமபுரம் (2) திருவதிகை வீரட்டானம்
(3) திருப்பிரம்மபுரம் (4) திருப்புன்கூர்
(5) திருவீழிமிழலை

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

කර්ණාටක සංගීතය II
கர்நாடக சங்கீதம் II
Carnatic Music II

55 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி II இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) சுருதி நிர்ணயிக்கப்பட்ட வாத்தியத்திற்கு உதாரணம் தருக.
(ii) சர வாத்தியம் என்றால் என்ன ?
(iii) நிஷ்கள வாத்தியங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(iv) நாதம் உற்பத்தியாகும் முறையினை அடிப்படையாகக் கொண்டு இசைக்கருவிகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவற்றினைக் குறிப்பிட்டு, அவற்றிற்கு உதாரணம் தருக.
(v) உபதாள வாத்தியமாகிய கடத்தின் அமைப்பினை விளக்குக.

**2.** (i) கிருதிகளை அலங்கரிக்கும் அணிகளை அவற்றின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவற்றினைக் குறிப்பிடுக.
(ii) ஸ்வராக்ஷர அணியினை உதாரணத்துடன் விளக்குக.
(iii) தசவித கமகங்களையும் வரிசைக்கிரமமாக எழுதுக.
(iv) தசவித கமகங்களுள் **இரண்டினை** உதாரணத்துடன் விளக்குக.

**3.** (i) மேலைத்தேய லிபி முறை எவ்வாறு அழைக்கப்படும் ?
(ii) மேலைத்தேய இசையில் சப்தஸ்வரங்களுக்கு வழங்கப்படும் பெயர்களைக் குறிப்பிடுக.
(iii) மேலைத்தேய இசையில் 12 ஸ்வரஸ்தானங்களுக்கும் வழங்கும் பெயர்களைக் குறிப்பிடுக.
(iv) சங்கராபரணம், கல்யாணி ஆகிய இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களை மேலைத்தேய லிபி முறையில் எழுதுக.

## பகுதி II

**4.** (i) 'முவ்வ கோபால' என்னும் முத்திரையையுடைய வாக்கேயகாரர் யார் ?
(ii) அவர் இயற்றிய **இரண்டு** பதங்களைக் குறிப்பிடுக.
(iii) அவர் கையாண்ட அபூர்வ இராகங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(iv) மேலே குறிக்கப்பட்ட வாக்கேயகாரர் போன்று தமிழில் பதங்கள் இயற்றிய வாக்கேயகாரர் **மூவரினைக்** குறிப்பிடுக.
(v) 'முவ்வ கோபால' என்னும் முத்திரையைக் கையாண்ட வாக்கேயகாரரின் இசைத்தொண்டினையும் அவர் இயற்றிய உருப்படிகளின் இசைச் சிறப்பினையும் மதிப்பிடுக.

**5.** பின்வரும் இராகங்களுள் **இரண்டினைத்** தெரிவு செய்து அவற்றின் இலட்சணங்களை விரிவாக எழுதுக (உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்).
(i) 56 ஆவது மேளகர்த்தா இராகம்
(ii) சுத்தசாவேரி
(iii) பண்-கௌசிகத்திற்கு இணையான கர்நாடக இராகம்
(iv) வசந்தா

**6.** (i) பின்வரும் கூற்றுகளுக்குப் பொருத்தமான உருப்படியினை / இசைவடிவத்தினைக் குறிப்பிடுக.
(அ) ஹிந்துஸ்தானி இசையில் 'ஜாவடி' என்னும் உருப்படிக்கு ஒப்பான கர்நாடக சங்கீதத்தில் வழக்கத்திலுள்ள உருப்படி
(ஆ) இவ்வுருப்படியின் மாதுவில் ஜதிகள் பிரதானமாக அமைவதோடு சிற்சில இடங்களில் ஸ்வரங்களும் வார்த்தைகளும் கலந்து அமைந்திருக்கும்.
(இ) 7ஆம், 8ஆம், 9ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பண்ணமைதி கொண்ட இசைவடிவம்.
(ஈ) மோகன இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடப்படுவது.
(உ) இராகத்தின் இலட்சணத்தை ஸாகித்தியத்தில் விளக்கும் அப்பியாசகான உருப்படி
(ii) மேலே தரப்பட்ட உருப்படிகளுள் ஒன்றினைப்பற்றி விரிவான இலட்சணம் எழுதுக. (இயற்றியவர் பெயர், உதாரணம் எழுதப்படல் வேண்டும்).

[பக். 2 ஐப் பார்க்க

**7.** (i) தபேலா அல்லது ஸிதார் வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.

(ii) ஹிந்துஸ்தானி தாளங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அத்தாளங்களை அங்க அடையாளங்களுடன் (டேக்கா) எழுதி விளக்குக.

**8.** நீர் கண்டுகளித்த வீணைக்கச்சேரி பற்றி விமர்சனக் கட்டுரை எழுதுக.

**அல்லது**

"இன்றைய காலகட்டத்தில் கர்நாடக சங்கீதத்தில் ஹிந்துஸ்தானி இசை செல்வாக்குச் செலுத்தியுள்ளது". இக்கூற்றினை தக்க ஆதாரங்களுடன் ஆராய்க.

❋ ❋ ❋

The National e-learning Portal for The General Education